# அன்பு மக்களே!

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு தை 2026 ஒளி 39 கதிர் 311

TAMIL CATHOLIC PUBLICATION JANUARY 2026 YEAR 39 VO; 311



**ஸ்தாபிதம்**
ஆனி 1995
**முகவரி**
41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4 CANADA.
**Email :**
tamilcatholicpublication@gmail.com

**தோலை பேசி :**
+1(647) 852-3141

**தயாரிப்பு + வெளியீடு**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**
திரு தோமஸ் டேவிட்
சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**
அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா
அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்
அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**
திரு மரியதாஸ்
சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்
தன்னார்வத் தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்**
**ரொறொன்ரோ**
புனித அந்தோனியார் தேவயலயம்
புனித லூர்து மாதா தேவாலயம்
புனித ரோசா லீமா தேவாலயம்
புனித பர்னபாஸ் தேவாலயம்
புனித எயார் வேய்ஸ் தேவாலயம்
**மாக்கம்**
தோமாஸ்மோர் தேவாலயம்
போனிபஸ் தேவாலயம்
**டொன்மில்ஸ்**
புனித 23ம் அருளப்பர் தேவாலயம்
தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு
தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்
மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்
**ஆதரவு**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்




தை மாதத்திலே, அன்பு மக்களே என்ற சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. இந்த சஞ்சிகையினுடைய முக்கியமான நோக்கமாக, பரிசுத்த பாப்பரசர் இந்த வருடத்தை அமைதி நிறைந்த ஆண்டாக மாற்றுவதற்கான அழைப்பை விடுததிருக்கும் அதேவேளை, இந்த அமைதி எப்படி நமது மக்கள் மத்தியிலே உலகளாவிய ரீதியிலே ஏற்பட வேண்டுமென்ற கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். ஆகவே இந்த கருத்துக்களின் அடிப்படையிலே உலகில் நடந்து கொண்டிருக்கின்ற பல பிரச்சனைகளை நாம் சிந்திக்க வேண்டிய ஒரு நிலையையும் நமக்கு உருவாக்கி இருக்கின்றார். அதாவது இந்த ஆண்டு அமைதிக்கான அழைப்பை விடுக்கும் பொழுது, அமைதிக்கு எதிரான எதிர் நோக்கு வாழ்க்கை முறை நடந்து கொண்டிருப்பதை திருத்தந்தை மறைமுகமாக நமக்கு அறிவுறுத்துகிறார். ஆகவே இந்த ஆண்டு அமைதி ஆண்டாக வரவேண்டும் என்பதற்காக, ஆயுதங்கள் அற்ற, போரற்ற சமூகமாக இந்த உலகம் மாற வேண்டும் என்பதை நினைவுறுத்தி, இந்த விடயத்தை அவர் முன்னெடுத்து வழி நடத்த இந்த உலக மக்களை விரும்பி கேட்டிருக்கின்றார்.

ஆனால் அடுத்த முனையிலே நாம் பார்க்கும் பொழுது, அமெரிக்கா, ரஷ்யா, சீனா, உக்ரேன், இஸ்ராயேல், இன்னும் வேறு சில நாடுகளிலும் போர்கள் மேலும் அதிகரிக்கின்ற இயல்புகளை நமக்கு தருகின்ற தடயங்கள் தரவுகள் கொடுத்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே இவ்விதமான இந்த இயல்புகள் இந்த ஆண்டு சிலருடைய ஆருடங்களை நாம் உற்று நோக்குகினற பொழுது, இந்த ஆண்டு ஆயுதங்களினால் அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பங்களை முன் கூட்டியே காட்டி நிற்கின்றது.

ஆகவே தான் வத்திக்கானிலே, உலகளாவிய ரீதியிலே தலைவனாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற அமெரிக்க பூர்வீக மகனாக இருந்து கொண்டு பாப்பரசராக இப்பொழுது நம் முன்னிலையிலே பணி புரிந்துகொண்டிருக்கும் திருத்தந்தை 14ம் லியோ அவர்களின் எண்ணங்கள் சரியாகவே இருக்கின்றது என்பதை உணர்ந்து, இந்த எண்ணங்களுக்கு இந்த உலகம் செவிமடுக்க வேண்டும் என்பதை விரும்பி, கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுகின்றது.

அத்தோடு எங்கள் மத்தியிலே 2026ம் ஆண்டு பல சம்பவங்கள் நிறைவேற்றப் பட்டுவிட்டன. அந்த சம்பவங்களுடைய ஒவ்வொரு துளிகளும் எமது சஞ்சிகையிலே பிரதிபலிக்க கூடிய முறையிலே முடிந்த அளவு முயற்சி பண்ணி சில தரவுகளை நாம் தந்திருக்கின்றோம். அந்த தரவுகள் உஙகளுடைய எண்ணங்களுக்கும் எதிர் நோக்குகளுக்கும் ஈடு கொடுக்க கூடிய சில துளிகளாவது தரப்பட்டிருக்கின்றது என்று நாம் மகிழ்ச்சி அடைகின்றோம், நிறைவு கொள்கின்றோம்

**உங்கள் அன்பின் ஆசிரியர் தோமஸ் டேவிட**

## திருக்குடும்ப விழா (உலகின் ஒவ்வொரு குடும்பங்களின் மாதிரி)



நமது குடும்பங்கள் நாளும் கடவுள் பயத்திலும் அவர் மேல் வைக்க வேண்டிய நம்பிக்கையிலும் வளர திரு அவை திருக்குடும்பம் விழாவைக் கொண்டாடுகிறது. எமது இரட்சகர் இயேசு, இயேசுவின் தாய் மரியாள், இயேசுவின் வளர்ப்புத் தந்தை சூசை ஆகியோரை கொண்ட குடும்பத்தையே நாம் திருக்குடும்பம் என்று அழகைக்கின்றோம். இந்த குடும்பத்தை நாம் திருக்குடும்பம் என்று அழைப்பதன் காரணம், தந்தை சூசை நீதிமானாயும் கடவுளுக்கு கீழ்ப்படிந்து மரியாளை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டவருமாய் இருக்கின்றார். மரியாள் ஜென்ம பாவமில்லா அமல உற்பவியும், கடவுளின் இரட்சணிய திட்டத்தை கீழ்படிவோடு ஏற்றுக் கொண்டவரும் ஆவார். இவர்களின் மகன் இயேசு கடவுளின் ஒரே ஒரு மகன், அடிமையின் தன்மை பூண்டு தனது பிதாவுக்கு கீழ் படிந்து, மனுக்குல இரட்சணியத்திற்காக மனிதனாக பிறந்து, பாடுகள் பட்டு, சிலுவையில் தனது ஆருயிரையே தியாகப்பலியாக்கினவர்.

இந்த குடும்பத்தில் இம்மூவருடைய அன்பு பாசம், இரக்கம், பணிவு, தியாகம், பொறுமை, வாய்மை, தூய்மை, நீதி, நேர்மை, எதையும் தாங்கும் இதயம், கடவுளுக்காக எதையும் செய்யும் துடிப்பு என்று அடிக்கிக் கொண்டே போகலாம், இவர்களுக்கு இணை இவர்கள் தான். எனவே அன்பினை அடித்தளமாகக் கொண்டு அடுத்தவர்களின் உணர்வுகளை மதித்து குடும்பத்தில் பொறுப்புடன் வெறுப்பின்றி விருப்பத்தோடு பகிர்ந்தால் அங்கே திருக்குடும்பம் மலரும். மகிழ்ச்சியின் பிறப்பிடம் குடும்பம். இறைவன் உறையும் மையம் திருக்குடும்பம். தியாகங்கள் நிறைந்த அன்பு, துன்பத்தில் உடனிருக்கும் பாசம், கடவுளின் பராமரிப்புக்கு முழுமையாக தந்த ஒத்துழைப்பு, இதனால் உலகம் போற்றும் உன்னத குடும்பமானது. இயேசு மரி சூசை என்ற குட்டிக் குடும்பத்திடம் நம் குடும்பங்களை அர்ப்பணிப்போம். நமது குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் நீங்கி, தியாகம் அன்பு பாசம் நிரம்பி வழிய வரம்தர இணைந்து ஜெபிப்போம். குடும்பம் என்பது அன்பு உள்ளங்களின் சங்கமம், ஆழமான உறவுகளின் அர்ப்பணம், சமுதாய கூட்டமைப்பின் அடிப்படையான ஓர் அங்கம் ஆகும். இது இறைவனால் அமைக்கப்பட்ட ஒரு தெய்வீக அமைப்பு. அதன் மையம் இயேசுக் கிறிஸ்துவே. பாசங்களையும் உறவுகளையும் சேர்ப்பதுதான் குடும்பம். இதற்கு அடிப்படை தேவை ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இரங்கும் உள்ளம் போன்ற உயரிய பண்புகளை நம் உள்ளத்தில் கொண்டு நம் குடும்ப வாழ்வை தொடர இத் திருக்குடும்ப பெருவிழா கொண்டாட்டத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடி இறையருளையும் இரக்கத்தையும் மன்றாடுவோம்.

(அருட் பணி. தோமஸ் அந்தோனிப்பிள்ளை)

## திருக்காட்சிப் பெருவிழா

திருக்காட்சிப் பெருவிழா என்பது கடவுள் மனித உருவில் தம்மை வெளிப்படுத்திய வெளிப்பாடு ஆகும். திருக்காட்சிப் பெருவிழாவை ஆங்கிலத்தில் “ADVENT” என்று அழைக்கின்றோம். “ADVENT” என்றால் “வெளிப்பாடு” என்று பொருள். இந்த ‘ADVENT” என்ற சொல் “ADVENTUS” என்ற கிரேக்க சொல்லில் இருந்து பிறந்தது. இத்திருக்காட்சி பெருவிழாவில் கிழக்கிலிருந்து இறை மகன் இயேசு பாலனை தரிசித்து வணங்கி பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகிய காணிக்கைப் பொருட்களை வழங்க வந்த மூன்று அரசர்களின் வருகையை மேற்கோள் காட்டியும் இவ்விழாவை கொண்டாடுகின்றோம். இதனால் தான் இவ்விழாவை “மூவிராசாக்கள் பெருவிழா” என்றும் அழைக்கின்றோம். காரணம் ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்தலகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து “யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம் அவரை வணங்க வந்திருக்கிறோம்.” (மத் 1:1-2) என்று கூறினார்கள். இது கடவுள் மனித உருவில் தம்மை வெளிப்படுத்திய தமது வெளிப்படுத்தலை புறவினத்தாருக்கும் அவர் வெளிப்படுத்தினார். என்பதை குறித்து காட்டுகின்றது.

ஆகவே திருக்காட்சிப் பெருவிழா என்பது கடவுள் மனித உருவில் தம்மை வெளிப்படுத்திய வெளிப்பாடு ஆகும். இதே திருக்காட்சி எனக்கு தனிப்பட்ட விதத்தில் கிடைத்ததா அல்லது கிறிஸ்தவ விசுவாசம் குறித்த வெறும் அறிவு மாத்திரமா என்பதை நாம் சீர்தூக்கி பார்க்க அழைக்கப்படுகின்றோம்.

திருவிவிலியத்தில் “மெசியா யூதேயாவிலுள்ள பெத்தலகேமில் பிறப்பார்” என்று தெள்ளத் தெளிவாக எழுதியிருந்தும், அதனை இஸ்ராயேல் மக்கள் அறிந்திருந்தும், அவர்கள் இந்த கடவுள் மனிதவதார வெளிப்பாட்டை தவறியது ஏன்? திருக்காட்சி

திருவிழாவே எமது கிறிஸ்தவ விசுவாசம் என்றால் அது மிகையாகாது. இதை இன்னும் சிறிது விளக்கமாக கூறின், என்மேல் கொண்ட அன்பினால் எனது உருவை எடுத்து, என் மத்தியில் வாழும் இறைமகன் இயேசு தன்னை எனக்கு ஒவ்வொரு மணித்துளியும் வெளிப்படுத்துகிறார். இவ்வாறு தன்னை ஒவ்வொரு மணித்துளியும் வெளிப்படுத்தும் இறைவனை நான் எனது விசுவாச கண்களால் கண்டு தரிசித்து பணிந்து வணங்குவதே எனது கிறிஸ்தவ அழைப்பாகும் ஆகும்.

இந்த மூன்று அரசர்களின் உள்ளம் இயேசுவைக் காண வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தபோது, வழிதெரியாமல் திணறிக் கொண்டிருந்தாலும், அந்த நேர்மையான எண்ணம் அவர்களைக் கடவுளின் மகனிடம் கொண்டு சேர்த்தது. நமது எண்ணம் சிறந்து இருந்தால் சிறப்பு. நிச்சயம் நாம் செல்ல வேண்டிய எல்லையை அதுவே நமக்கு காட்டும். இந்த மெசியா யூதரின் அரசர் என அழைக்கப்பட்டாலும், இவர் அனைத்துலகின் அரசர், எல்லா இனங்களையும் தன் ஆளுமையால் அதிகாரத்தால், தன் வார்த்தையால், தன் மரணம் உயிர்ப்பால் ஒன்றினைக்கக் கூடியவர். இறைவனின் ஒளி எல்லா இனங்களின் மேலும் ஒளிரச் செய்ய தோன்றியவர் என்பதை, தேடி வந்து ஞானியர் அனுபவித்த தரிசனமும் வெளிப்பாடும், இவர்களை வழி நடத்திய சிறப்பு விண்மீனும் பெரும் தடையங்களும் தரவுகளும் எடுத்துக்காட்டாக அமைகின்றது. (தோமஸ் டேவிட்)

## தமிழர் தைப்பொங்கல் திருநாள்

பொங்கல் என்பது உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகத்தால் கொண்டாடப்படும் ஒரு அறுவடைத் திருவிழாவாகும். இந்த விழா தென் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ் என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடாப்படுகின்றது. பொங்கல் உழைக்கும் மக்கள் தாம் இயற்கை தெய்வமாக நினைக்கும் சூரியனுக்கும் மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாக கொண்டாடப்படுகின்றது. இந்த பண்டிகை இந்து கடவுளான சூரிய தேவனுக்கும் இயற்கை தேவனுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விழாவாகும்.

தைப்பொங்கல் அல்லது சூரியப் பொங்கல் என்பது வேலை, வணிகம் மற்றும் வாழ்க்கையில் செழிப்பு, வளர்ச்சி மற்றும் மிகுதியைக் குறிக்கிறது. இது இந்து புராணங்களில் ஒரு முக்கியமான மத சமூக கலாச்சார மற்றும் புராணப் பண்டிகையாகும். பொங்கல் என்ற அறுவடைத் திருவிழா தமிழ் மாதமான ‘‘தை’’ மாதத்தில் (ஜனவரி நடுப்பகுதியிலிருந்து மாசி மாத நடுப்பகுதி வரை) கொண்டாடப்படுகிறது. தமிழர் தாயகத்தில் ‘‘சூரிய பொங்கல்’’ மற்றும் ‘‘மாட்டுப் பொங்கல்’’ மட்டுமே கொண்டாடப்படுகின்றது. துல்லியமாகச் சொன்னால் இலங்கையில் நகர்ப்புறங்களில் : ‘‘சூரிய பொங்கல்’’ மட்டுமே கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் முதல் நாள் ‘‘போகி பொங்கல்’’ இது பழையன கழிதலும் புதியன புகுதலும் கொண்டாட்டம். இரண்டாம் நாள் ‘‘சூரிய பொங்கல்’’. இது நல் அறுவடையை தருகின்ற சூரிய கடவுளுக்கு நன்றி செலுத்தும் விழா. இதுவே உலகமெங்கிலும் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களாலும் பொங்கல் விழாவாக கொண்டாடப்படுகின்றது.

மூன்றாவது நாள் ‘‘மாட்டுப் பொங்கல்’’ இந்த நாள் நிலத்தை உழுது மாடுகள் செய்யும் கடின உழைப்பை நினைவு கூரும் வகையில் கால்நடைகளை கௌரவிப்பதற்கும் வழிபடுவதற்கும் உரிய கொண்டாட்டம். பொங்கலின் நான்காவது மற்றும் இறுதி நாள் ‘‘காணும் பொங்கல்’’ என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளில் சமூகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களுடனான உறவுகளை வலுப்படுத்துகிறது. குடும்பங்கள் ஒன்று கூடி ஒரு ஆடம்பரமான உணவு உண்கிறார்கள், இளம் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களின் ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இது பாரம்பரிய நாட்டுப்புற நடனங்களுக்கும் ஒரு நாளாக அமைகின்றது.

கனடா நாட்டின் பூர்வீக மக்களுடைய கடவுளும் சூரிய பகவானாக இருப்பதால், அவர்களும் இந்த நாளிலே தான் தங்களுடைய சூரிய கடவுளுக்கு விழா எடுத்து மகிழ்வார்கள்.

எனவே எமது தாய் திருச்சபை ஒவ்வொரு இன மக்களும் தமது இன கலாச்சாரம் பண்பாடு மற்றும் நாகரீகம் போன்ற தமது இனங்களின் அடையாளங்களோடு தமது கிறிஸ்தவ விசுவாசத்தை ஒவ்வொரு கிறிஸ்தவரும் முன்னெடுத்து செல்வதை வரவேற்கின்றது. ஆகவே தான் கத்தோலிக்க கிறிஸ்தவர் நாம் எமது ஆலயங்களில் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றோம். ஆயினும் தைப்பொங்கல் விழா திருப்பலியின் கருப்பொருளாக ‘‘கடவுளாகிய ஆண்டவர் நமக்குக் கதிரவனும் கேடயமுமாய் இருக்கின்றார் ’’(சங் 84:11) என்று கொள்வதன் நோக்கம் ‘‘ஒன்றுமில்லாமையிலிருந்து

முழு பிரபஞ்சத்தையுமே படைத்து, அதனை பாதுகாத்து பராமரித்து விழைச்சலையும், செழிப்பான அறுவடையையும் தரும் இறைவனுக்கு நாம் நன்றி செலுத்தும் ஒரு நன்றித்திருப்பலி விழாவாகவே கிறிஸ்தவர்கள் நாம் இவ் பொங்கல் விழாவை கொண்டாடுகின்றோம்.

இந்த வகையில் தமிழ் பேசும் கிறிஸ்தவ மக்கள் நாம் எமது தமிழர் தாயகத்திலும் உலகெங்கிலும் பொங்கல் விழாவை கொண்டாடும் அனைத்து தமிழ் உறவுகளுக்கும் இந்த ஆண்டு 2026 தைப்பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். (சகோ.மரீனா)

## மரபு திங்கள் விழா (உலகத்தமிழர் விழா)

1980 களில் தமிழ் மக்கள் கனடாவை நோக்கி பெருந்தொகையாக வருகை தர ஆரம்பித்திருந்தார்கள். பெரும்பான்மையானோர் மொன்றியல் நகரில் கால்பதித்து, அங்கே வாழ்வதற்குரிய இயல்புகளை பயன்படுத்திக் கொண்டார்கள். அங்கிருந்து 80களின் பின் பகுதியில் அதாவது 1987,1988 போன்ற பகுதிகளிலே அவர்கள் ரொறொன்டோவை நோக்கி பெருந்தொகையாக வந்து குடியமர்ந்தனர். இவர்களுடைய வாழ்வியல்புகளிலே பலர் இந்த தமிழ் இயல்புகளைப் பற்றி அறிவதற்கு விருப்பமாக இருந்தார்கள். கனடாவிலே அந்த நேரத்திலே ஆரம்பத்திலே இந்த தமிழ் மரபுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு விரும்புபவர்களோடு தைப்பொங்கல் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வந்தன.

பின்பு அந்த தைப் பொங்கல் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களோடு புதுவருடமாகக் கொண்டாடுவதற்கு முனைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்பு அவைகள் மரபுத் திங்களாக மாறின.

மரபுத் திங்கள் என்பது தமிழ் மக்களினுடைய கலை கலாச்சாரத்தையும் அவர்களுடைய சரித்திர வரலாற்றையும், அவர்களுடைய சுதந்திர வேட்க்கையை கொண்ட விருப்பு வெறுப்புகளையும் தெரிவிக்கின்ற ஒரு உணர்வு பூர்வ செயற்பாடாகும். இந்த உணர்வு பூர்வ நிகழ்வை மரபுத் திங்கள் மாதமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்கிற ஆவலோடு, ஆரம்பத்திலே நகரசபைகளோடு சேர்ந்திருக்கிறவர்களிடம் அணுகி ஒரு சிலர் அதை ஆரம்பிக்க முயற்சி செய்தார்கள்.

அதேநேரம் அந்த முயற்சியில் முன்னிலையில் நின்றவர்களில் நீதன்ஷான் ஒரு பிரதானமானவர் என்று கூறலாம். இவர் இப்பொழுது இரண்டாம் முறையாகவும் ரொறொன்டோ மாநகர சபையிலே கவுன்சிலராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முதன் முறை ரொறொன்டோ மாநகர சபையிலே கவுன்சிலராக பதவி வகித்த போது, 2017 இல் ரொறொன்டோ மாநகர சபையையும் யாழ்ப்பாண மாநகர சபையையும் இணைத்து, யாழ் மாநகர அபிவிருத்தி திட்ட ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டார். அதை அப்பொழுது நடைமுறைப்படுத்த முடியாமல் போனாலும், இம்முறை அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றார்.

அது போன்று ஆரம்பத்திலே மாக்கம் மாநகர சபையிலே லோகன் கணபதிப்பிள்ளை அவர்கள் அங்கே நகரசபை உறுப்பினராக இருக்கும் பொழுது, மாக்கம் நகரசபையிலே தான் முதலாவது முறையாக மரபுத் திங்களை ஆரம்பித்து அங்கே அவர்கள் அந்த மரபுத் திங்களினுடைய ஏற்பாடுகளை வேறு அரசாங்கங்களுக்கும் கொண்டு போக வேண்டுமென்கின்ற முனைப்போடு தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தார்கள்.

அங்கிருந்து தனியாசலம் அவர்கள் (provincial council) மாநில அரசாங்கத்திலே ஒன்ராரியோவில் இருக்கும் பொழுது இது ஒன்ராரியாவினுடைய தீர்மானமாக மரபுத்திங்கள் அங்கிகரிக்கப்பட்டது. அதன் பின்பு கரி ஆனந்த சங்கரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது மத்திய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கனடா முழுவதும் இந்த மரபுத் திங்கள் கொண்டாடப்படுகின்ற ஒரு விழாவாக மாறியது. இப்பொழுது மூன்று அரசாங்கங்கள் அதாவது நகர சபை அரசாங்கங்கள், மாநில அரசாங்கங்கள் அத்தோடு மத்திய அரசாங்கமும் இணைந்து இந்த விழாவை சிறப்பிக்கின்றன. இதனால் தமிழ் மக்களினுடைய அபிலாசைகளை முழு உலகத்திற்கும் வெளிக்கொணரும் எத்தனையோ காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் அவர்களை பற்றிய ஒரு அறிவியல் இயல்புகளை வெளிப்படுத்துவதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் ஆங்காங்கே அந்த மாதத்திலே குறைந்தது ஒரு வாரமாவது அவர்களுடைய பாடசாலைகளிலே அல்லது அவர்களுடைய பொது இடங்களிலே இதை நிறைவேற்றுவதற்குரிய பொருளாதார பங்களிப்பையும் வழங்கி, இப்பொழுது நாடு முழுவதும் சுமூகமாக நடந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே இந்த மரபுத்திங்களினுடைய இயல்பு இப்பொழுது சுமூகமாக நடக்கின்ற படியால் ஒரு மாதம் முழுவதும் கொண்டாடுகின்ற காரணத்தால், அதிகமான சங்கங்கள், சபைகள் மற்றும் குழுவினர்கள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் மற்றும் கனடாவில் வாழும் இலங்கையின் ஊர் சமூகம் போன்றவர்கள் தங்களுடைய தலைமையிலே மரபுத்திங்கள் விழாவை

நடாத்துகின்றார்கள். அந்த நிகழ்வுகளிலே அவர்கள் மரபுத் திங்கள் என்கின்ற இயல்போடு பொங்கல் விழாவையும் சேர்த்து கொண்டாடி, இந்த மரபுத் திங்களினுடைய தன்மையை இளம் தலைமுறையினருக்கும் கொண்டு செல்லக்கூடிய முறையிலே நிகழ்வுகளை நடாத்தி, அவர்களை அறிவூட்டி, அவைகளினால் தமிழருடைய, தமிழ் சரித்திரத்தினுடைய, தமிழ் வரலாற்றினுடைய, தமிழருடைய கலாசாரத்தினுடைய, தமிழருடைய சமூகப் பணி இயல்புகள் பற்றிய முழு அறிவையும் அவர்கள் பெறக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

இதனால் கனடாவில் தற்பொழுது தமிழ் நிகழ்வுகளுக்கு எந்தவிதமான குறைகளும் இல்லாமல் கனடாவிலே இப்பொழுது ஆரம்பப் பாடசாலைகளிலும் மற்றும் வெளி உயர்தர பாடசாலைகளிலும் மற்றும் பல்கலைக்கழங்களிலும் கூட தமிழ் பீடங்கள் இருக்கின்றனர்.

ஆகவே இந்த இயல்புகள் இனிமேல் வளர்ச்சி அடைகின்ற ஒரு அற்புதமான சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்றது. இதனால் நாங்கள் பெருமைப்படுகின்றோம், மகிழ்ச்சி அடைகின்றோம். அது மட்டுமல்லாமல் இந்த வளர்ச்சி அதிகமாக வட அமெரிக்க ஐரோப்பா அவுஸ்ரேலியா ஆசியா கண்டங்களிலும் இந்த நிகழ்வுகள் நடப்பதினால், நாங்கள் ஒரு முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பு நினைத்தோம், அதாவது, வருகின்ற 25 வருடங்களிலே தமிழினுடைய இயல்புகள் மிகப் குறைந்து போய்விடும் என்று. ஆனால் இனி அந்த கதைக்கு இடமில்லை என்பதை உலகளவில் நடக்கின்ற நிகழ்வுகள் தமிழர் எம்மை ஆறுதல்படுத்தி நிற்கின்றன.

ஏனென்றால் தமிழ் நாட்டுக்கு வெளியிலே இலங்கை மலேசியா சிங்கப்பூர் ஆசியாவிலே இது மிகவும் சிறப்பாக வளர்ச்சி பெறுவதறற்குரிய சந்தர்ப்பத்திற்கு இந்த ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்க நாடுகளும் சேர்ந்து துணையாக இருக்கின்றன. ஆகவே அந்த இயல்புதன்மைகளை நாம் உற்று நோக்குகின்ற பொழுது இனிமேல் தமிழுக்கு சாவில்லை அல்லது தமிழ் இந்த உலகத்திலே முதல் நான்கு மொழிகளிலே ஒரு மொழியாக, பழமையான மொழியாக திகழ்கின்ற பொழுது, அது மற்ற மொழிகள் போல் இறந்துவிடும் என்று எதிர்பார்த்த அந்த முனைப்பு இனிமேல் கிடையாது. இந்த மொழி தொடரப் போகின்றது, வளரப் போகின்றது. தமிழ் மக்கள் மத்தியிலே மட்டுமல்ல ஏனைய மக்கள் மத்தியிலும் கூட பிரபல்யமாகிக் கொண்டிருக்கின்றது. அவர்களும் இந்த மொழியை விரும்பி படிப்பதற்கும் இந்த மொழியினுடைய இயல்புகளை அறிவதற்கும், அனுபவிப்பதற்கும் தயாராகி விட்டார்கள். அதுவே ஒரு காலத்திலே தமிழினுடைய இயல்பு மிக சிறப்பாக வலம் வருவதற்குரிய அடையாளங்களை இப்போது நாம் காண்கின்றோம். அந்த வகையிலே அந்த எதிர் நோக்கிலே இப்போது இருக்கின்ற இந்த மரபுத் திங்கள் சிறப்பாக உலகம் முழுவதும் துணைபுரிகின்றது என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

(தோமஸ டேவிட்)

## ஆயுள் வேத மருத்துவர் பேராசிரியர் திரு போல் ஜோசவ் அவர்களின் பொங்கல் உரை

கடந்த நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு என் நினைவுகளை மீள் சென்று பார்க்கின்றேன். இளவாலையில் புனித யாகப்பர் ஆலயத்தினுடைய பங்குத் தந்தையாக அருட் தந்தை அவர்களே இருந்தார்கள். இந்த கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெறுகின்ற பொங்கல் விழாவை காணும் போது, நாங்கள் இளைஞர்களாக இருந்து ஒரு இளைஞர் கழகத்தை தொடங்கி நாற்பத்தாறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எங்களுடைய ஆலயத்திலே பொங்கல் விழாவை சிறப்பித்த அந்த கணங்கள் தான் நினைவிற்கு வருகின்றது.

அந்த நேரத்திலே கத்தோலிக்க ஆலயங்களிலே பொங்கல் விழா நடந்ததாக எனக்கு தெரியவில்லை. சில வேளைகளில் அருட்தந்தை சவிரிமுத்து தலைமையிலே திரு மறைக் கலாமன்றத்திலே பொங்கல் விழா நடந்திருக்கலாம். ஆனால் கத்தோலிக்க ஆலயங்களிலே நடந்ததாக எனக்கு நினைவில்லை. அந்த நேரத்திலே பத்திரிகைகளில் கூட மிகப் பிரபல்யமாக, ‘‘கத்தோலிக்க ஆலயத்திலே பொங்கல் விழா நடைபெறுகின்றது’’ என்பதை ஒரு பெரிய செய்தியாக பிரசுரித்திருந்தார்கள். அதன் தொடர்சியாக இன்றும் அதை பார்க்கின்ற பொழுது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஒரு சில விடயங்களை கூறிக் கொள்ள விரும்புகிறேன். இங்கு இரண்டு பக்கத்திலும் மரபுத் திங்கள் என்று “Banners” தொங்க விடப்பட்டிருக்கிறது. ஏன் இந்த மரபுத்திங்களை நாங்கள் கொண்டாட வேண்டும், அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளிலே ஏன் இந்த மரபுத்திங்களை நாங்கள் கொண்டாட வேண்டும்?

மரபு என்பது விஞ்ஞானத்திலே “Gene” என்று சொல்லுவோம். தமிழர்கள் நாங்கள் எந்த புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழ்ந்தாலும், இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும், நாங்கள் தமிழர்களே

தவிர வெள்ளைக்காரர் ஆகிவிட முடியாது. ஆகவே எங்களுக்குள்ளே இருக்கின்ற தமிழர் என்ற அந்த உணர்வும், பண்பாடும், கலையும், மொழிப்பற்றும், நாம் ஒரு இனமாக இந்த விழாவை நாங்கள் புலம் பெயர்ந்த நாடுகள் அனைத்திலும் கொண்டாடும் போது, தமிழர் எமது சிறப்புக்களை முழு உலகத்திற்கும் வெளிக்கொணர்கின்றோம். இதனை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லுகின்ற விழாவாக இந்த விழா இருக்கப் போகின்றது.

இங்கு இருக்கின்ற இளைய தலைமுறைக்கும் தெரியாதோருக்கும் சில விடயங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி" என்பது தமிழர்களின் மிக நீண்ட வரலாற்றையும், பழமையையும் பறைசாற்றும் புகழ்பெற்ற புறப்பொருள் வெண்பாமாலை ஆகும்.

கல்லை முதலில் உடைத்து ஆயுதமாக்கி, அதை வைத்து வேட்டையாடி, பல வேலைகளை செய்தவர்கள் நம் தமிழர்கள். நான் சொல்வது ஒரு கதையல்ல தமிழர் வரலாறு. கீழடி நிலம் தமிழகத்திலே பல இடங்களிலே ஆதிச்செந்தூர், அத்திரப்பாக்கம், கீழடி போன்ற இடங்களிலே அகழ்வாராச்சிகளிலே தொல் பொருள் ஆராட்சியாளர்கள், பதினைந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த கற்களை அப்போது இருந்த மக்கள் (எங்களை போன்ற மனிதர்கள் அல்ல ஆதி கால மனிதர்கள்) அவர்கள் இந்த கற்களை கூரிய ஆயுதங்களாக பாவித்திருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த கற்களை அமரிக்காவிற்கு அனுப்பி பரிசோதித்ததில், இந்த கற்களின் ஆயள்காலங்கள் கிட்டத்தட்ட 15 இலட்சம் ஆண்டுகள் என்று சொல்லி இருக்கின்றார்கள்.

**ஆயுள் வேத மருத்துவர் பேராசிரியர் திரு போல் ஜோசவ் அவர்களின் பொங்கல் உரையின் மிகுதியை அடுத்த மாத (மாசி), "அன்பு மக்களே" மாதாந்த சஞ்சிகையில் வாசித்து மகிழுங்கள்.**


## புனித செபஸ்தியார் விழா ((தை 20ம் திகதி)

இன்றைய பிரான்ஸில் (அன்றைய கவுல்) ஒரு உன்னத குடும்பத்தில் பிறந்த புனித செபஸ்தியார், மிலானில் கல்வி பயின்றார். அவர் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை ஒரு இரகசிய கிறிஸ்தவராக வாழ்ந்தார். துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு சேவை செய்ய ஒரு அஞ்ஞானகனாக உரோமய ஏகாதிபத்திய இராணுவத்தில் சேர்ந்தார். அவரது வீரம் உறுதிப்பாடு மற்றும் வலிமைக்கு பெயர் பெற்ற அவர், விரைவில் ஒரு அதிகாரியாகவும் பின்னர் உரோமை பேரரசர் தியோக்கிளேசியனின் அன்பான சிப்பாயாகவும் ஆனார்.

புனித செபஸ்தியார் தனது பெரும்பாலான நேரத்தை சக வீரர்களையும், கைதிகளையும், கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதில் செலவிட்டார். கிறிஸ்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்ட காலத்தில் சிறையில் இருந்த ஒரு சிப்பாயின் மனைவியைச் சந்தித்து அவரது நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைந்து அவரது நோயைக் குணப்படுத்தினார். அவர் ஒரு திறமையான குணப்படுத்துபவர் என்று அறியப்பட்டார். உரோமைய ஆளுநர் குரோமேஷியஸை கிறிஸ்தவத்திற்கு மாற்றியபோது புனித செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவராகக் கண்டறியப்பட்டார். இதன் காரணமாக பேரரசர் தியோக்கிளேஷியன் புனித செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவர் என்ற முடிவுக்கு வந்து அவரை ஒரு வயலில் ஒரு கம்பத்தில் கட்டி அம்புகளால் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டார். வில்லாளர்கள் அவரது உடலை அம்புகளால் துளைத்தனர். அவரது உடல் "ஒரு முள்ளம் பன்றியைப் போல அம்புகளால் நிறைந்தது". அவர் இறந்து விட்டதாக நம்பப்பட்ட வில்லாளர்கள் அவரது உடலை அடக்கம் செய்யாமல் விட்டுச் சென்றனர்.

ஆனால் அவர் இறக்கவில்லை. அவர் தொடர்ந்தும் கிறிஸ்துவுக்குள் பல ஆன்மாக்களை கொண்டுவருவதில் மறைவாக செயற்பட்டு வந்தார். புனித செபஸ்தியார் இன்னும் உயிருடன் இருப்பதைக் கண்டு தியோக்கிளேஷியன் கோபமடைந்தார். இதனால் அரண்மனைப் படிகளில் புனித செபஸ்தியாரை கொடூரமாக அடித்துக் கொலை செய்து, அவர் இறந்ததை உறுதி செய்த பின், தியோக்கிளேஷியன் அவரது உடலை உரோமையின் முக்கிய கழிவு நீர் தொட்டியான குளோகான மக்சிமாவில் வீசினார். ஆனால் கிறிஸ்தவர்கள் அவரது உடலை மீட்டு "செபாஸ்டியானோ" என்று அழைக்கப்படும் ஒரு கல்லறையில் இரகசியமாக அடக்கம் செய்தனர். அவர் இறந்து கிட்டத்தட்ட 80 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது எச்சங்கள் நகர்த்தப்பட்டு உரோமையின் ஏழு முக்கிய தேவாலயங்களில் ஒன்று அவரது நினைவுச் சின்னங்கள் மற்றும் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டது. புனித செபாஸ்தியார் வில்லாளர்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் இறக்கும் மக்களின் பாதுகாவலர் என்றும், கொள்ளை நோய்க்கு எதிரான பாதுகாவலராகவும், நம்ப முடியாத குணப்படுத்துனர்,

சுவிஷேசகர் மற்றும் முன்மாதிரி கிறிஸ்தவர் என்றும் அழைக்கப்படுகின்றார். (திருமதி தோமஸ் டேவிட்)



குருத்துவ திருநிலைப்படுத்தல்
Priestly Ordination
அருட்பணி
பிலேந்திரன் வொன்சியஸ்
(CMF)
தேவன்பிட்டி பங்கின்
குருத்துவ அருட்பொழிவின்
முதல் குருமணி.
கிளரேசியன் சபையின் அருட்பணியாளருமான
பிலேந்திரன் வொன்சியஸ்
(CMF)
17.01.2026
ஜெர்மணியில்
குருத்துவ அருட்பொழிவை
பெற்றார்
17th
OF
JANUARY
2026
முதல் திருப்பலி
31.01.2026
புனித சவேரியார் ஆலயம்
தேவன்பிட்டி பங்கு
மன்னார்







நவ மொழி நாயகனே!
வடமாகான வலிமீசாமின் புர்வீகமே!
தேவன்பிட்டி தெய்வீக குடும்பத்தில் உதித்தவனே!
புலேந்திரன் செல்வராணி (மகராசியின்), தம்பதிகளின் பிள்ளை
நவராசாவாகப் பிறந்து தேவன்பிட்டியின் தெய்வீகத்தில் திகழ்ந்து
தேவரின் திருமகன் சவேரியாரின் பாதுகாப்பில் பக்குவமாகி,
கத்தோலிக்க திருக்குடும்ப கன்னியர்களாக அற்பணம் செய்த
அக்காமார் வழி ஏற்றவனே!
தேசிய மடுமாதா அடையாளம் காத்த தேவன்பிட்டியின் திருமக[illegible]
ஐரோப்பா புறப்பட்டு அறிவுக்கழஞ்சியமானவனே!
விவிலிய வேத வாக்கியங்கள் விளங்கிடவே
விவிலிய மொழிகளை கற்றவனே நவ மொழிகள் அறிந்தவனே!
உன் எதிர்காலம் குறித்து எதிர்வுகூற இறைவன்
அவர் திட்டங்கள் நிறைவேற்றுவார் நீயோ
நவமொழி நாயகனாக வலம் வருவாய்
உன் அருட்பொழிவு நிறைவேற்ற தேவன்பிடடி தேடிவரும்
[illegible]ங்களை வரவேற்க உறவுகள் உற்சாகமாக ஆனந்தத்தில்
புலகாங்கிதம் அடைகின்றோம்
கனடா தமிழ் கத்தோலிக்க இணையமும் இணைந்து
மகிழ்ச்சியடைகின்றது.
தங்களை நவமொழி நாயகனே என்று அழைத்து
விருதுப் பெயர் தந்து வாழ்த்துகிறது வாழ்க!
படைக்கிறவன் படைக்கிறான் படைப்புக்களை
படைக்கப்பட்ட படைப்புக்கள் படைக்கவேண்டும்
படைத்தவனுக்காக

தோமஸ் டேவிட் (அன்பு மக்களே ஆசிரியர்)இயக்குனர்
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

## திருத்தந்தை 14ம் லியோவின் புதன்கிழமை மறைக்கல்வி உரை

அன்புள்ள சகோதர சகோதரிகளே இயேசுவின வாழ்க்கையில் மறை உண்மைகளில் நாம் கவனம் செலுத்திய யூபிலி ஆண்டிற்கு பிறகு 2ம் வத்திக்கான் திருச்சங்கத்திற்கும் அதன் தடையங்களும்ஆவணங்களை மீண்டும் வாசிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய மறைக்கல்வி உரை தொடரை நாம் ஆரம்பிக்கின்றோம். திரு அவையில் இந்த நிகழ்வின் அழகையும் முக்கியத்துவத்தையும் மீண்டும் கண்டறிய இது ஓர் அருமையான வாய்ப்பு ஆகும். இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டின் இறுதியில் திருத்தந்தை புனித 2ம் ஜோன் போல் அவர்கள் 20ம் நூற்றாண்டில் திருஅவை பெற்ற ஓர் பெரிய இறையாசீராக இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தை முன்னிலைப்படுத்துவது எனது கடமையாக நான் எப்போதும் உணர்கிறேன்.

2025ம் ஆண்டின் மீசையா திருச்சங்கத்தின் ஆண்டின் நிறைவோடு, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் 60வது ஆண்டு நிறைவையும் நாம் கொண்டாடினோம். இந்த நிகழ்வில் இருந்து நம்மை பிரிக்கும் காலம் மிக நீண்டதல்ல என்றாலும், இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் காலத்தை சேர்ந்த ஆயர்கள் இறையியலாளர்கள் மற்றும் விசுவாசிகளின் தலைமுறை இப்போது நம்முடன் இல்லை என்பது உண்மை. நாம் இத்திருச்சங்கம் வழங்கும் செய்தியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, அதன் உள்ளுணர்வுகளை பயன்படுத்துவதற்கான வழிகளை தேட வேண்டும். இதை செய்ய மற்றவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை மட்டும் நம்பி அதன் ஆவணங்களை மீண்டும் படித்து, அவற்றின் அர்த்தத்தைப் பற்றி சிந்திப்பதன் வழியாக அல்ல, அதை நாமே கவனமாக படிப்பதன் வழியாக உண்மையில் இதுவே இன்றும் திரு அவையின் பயணத்தில் வழிகாட்டும் விண்மீனாக விளங்கும் ஆச்சரியமாகும்.

ஆண்டுகள் கடந்தும் ஆவணங்கள் அவற்றின் பொருத்தத்தை இழக்கவில்லை. அவற்றின் படிப்பினைகள் திரு அவை மற்றும் இன்றைய உலகமயமாக்கப்பட்ட சமூகம் எதிர்கொள்ளும் புதிய சவால்கள் தொடர்பாக, குறிப்பாக மிகவும் பொருத்தமானவை என்பதை நிரூபிக்கின்றன என்று முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் கற்பித்தார். 1962ம் ஆண்டு ஐப்பசி 11ம் திகதி திருத்தந்தை புனித 23ம் யோவான் அவர்கள் இந்த திருச்சங்கத்தின் முதன்மை கூட்டத்தை தொடங்கி வைத்த போது, முழு திரு அவைக்கும் இது ஒரு புதிய ஒளிமயமான நேரத்தின் தொடக்கமாக இருக்கும் என்று கூறினார்.

இதில் உலகம் முழுவதிலும் இருந்து வந்த பல அருட்பணியாளர்களின் பணி உண்மையிலேயே ஒரு புதிய திரு அவைக்கான காலத்திற்கு வழி வகுத்தது. 20ம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு வளமான விவிலிய இறையியல் மற்றும் வழிபாட்டுச் சிந்தனைக்கு பிறகு, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தில் கிறிஸ்துவில் நம்மை தம்முடைய குழந்தைகளாக அழைக்கும் தந்தையாக கடவுளின் முகத்தை மீண்டும் கண்டு பிடித்தது. அது கிறிஸ்துவின் ஒளியில் திரு அவையை நாடுகளின் ஒளியாக, உறவு ஒன்றிப்பின் மறை உண்மையாக, கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான ஒன்றிப்பின் அருள் அடையாளமாகவும் பார்த்தது. இது ஒரு முக்கியமான வழிபாட்டுச் சீர்திருத்தத்தை தொடங்கி வைத்தது. மீட்பின் மறை உண்மையையும் கடவுளின் முழு மக்களின் உற்சாகமான மற்றும் உணர்வுபூர்வமான பங்கேற்பையும் மையமாகக் கொண்டிருந்தது.

அதேவேளையில் உலகிற்கு நம் மனங்களை திறக்கவும் உரையாடல் மற்றும் கூட்டுப் பொறுப்பு மூலம் நவீன காலத்தின் மாற்றங்கள் மற்றும் சவால்களை புரிந்து கொள்ளவும், மனித குலத்திற்கு தனது கரங்களை திறக்க விரும்பும் ஒரு திரு அவையாக, நம்பிக்கைகள் மற்றும் துயரங்களை எதிரொலிக்கவும், மேலும் நீதியான மற்றும் உடன் பிறந்த உறவு கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதில் ஒத்துழைக்கவும் இது நமக்கு உதவியது.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்திற்கு நன்றி. திரு அவை வார்த்தையாகிறது, திரு அவை செய்தியாகிறது, திரு அவை உரையாடலாகிறது. கிறிஸ்தவ ஒனறிப்பு மதங்களுக்கிடையிலான உரையாடல் மற்றும் நல்லெண்ணம் கொண்ட மக்களுடன் உரையாடல் மூலம் உண்மையை தேட தன்னை அர்ப்பணித்து கொள்கிறது. இந்த மனப்பான்மை, உள் மனப்போக்குகள் நமது ஆன்மீக வாழ்க்கையையும் திரு அவையின் மேய்ப்புப் பணிக்கான செயல்பாட்டையும் வகைப்படுத்த வேண்டும். ஏனென்றால் நாம் இன்னும் ஒரு பணிக்கான கண்ணோட்டத்தில் திரு அவை சார்ந்த சீர்திருத்தத்தை முழுமையாக உணர வேண்டும்.

இன்றைய சவால்களை எதிர் கொள்ளும் போது, காலத்தின் அடையாளங்களின் கவனமுள்ள பொருள் விளக்குனர்களாகவும், நற்செய்தியின் மகிழ்ச்சியின் அறிவிப்பாளர்களாகவும், நீதி மற்றும் அமைதியின் துணிவு மிகு சாட்சிகளாகவும் இருக்க அழைக்கப்படுகிறோம். பேரருள் தந்தை அல்பினோ லூசியானி பின்னர் திருத்தந்தையான முதலாம் ஜோன் போல் அவர்கள், விக்டோரியா பேனித்தோவின் ஆயராக இருந்த போது, “தேவைப்படுவது புதிய அமைப்புகள் முறைகள்

அல்லது கட்டமைப்புகள் மட்டுமல்ல மாறாக ஆழமான மற்றும் பரவலான புனித தன்மையும் ஆகும்" என்று வத்திக்கான் திருச்சங்கம் குறித்து தொடக்கத்தில் எழுதினார்.

ஒரு திருச்சங்கத்தில் நல்ல பலன்கள் என்பது பல ஆண்டுகளுக்கு பிறகு சவால்களையும் சிரமங்களையும் சந்தித்த பின்னரே தெளிவாகத் தெரியும். எனவே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியது போல், கடவுளுக்கும், அதன் ஆண்டவர் மீதும், அவர் அன்பு கூறும் அனைத்து மனிதர்கள் மீதும் அளவுக்கதிகமான அன்பு கொண்ட ஒரு திரு அவைக்கும் முதன்மைத்துவத்தை கொடுக்க நமக்கு உதவுகிறது. சகோதர சகோதரிகளே! பணியின் முடிவில் திருத்தந்தை புனித 6ம் பவுல் அவர்கள் திருச்சங்கத்தின் தந்தையர்களுக்கு கூறியது இன்றும் நமக்கு திசை வழியாக்கத்திற்கான அளவு கோலாக உள்ளது. கடந்தகாலம் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் சுருக்கப்பட்ட ஓர் அருளின் காலத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை உணர்ந்து, திருச்சங்கத்தின் முதன்மை கூட்டத்தை விட்டு வெளியேறி, மனித குலத்தை சந்தித்து அவர்களுக்கு நற்செய்தியின் செய்தியை கொண்டு வருவதற்கான நேரம் வந்து விட்டது என்று அவர் உறுதிப்படுத்தினார்.

கடந்தகாலம் ஏனென்றால், கிறிஸ்துவின் திரு அவை இங்கு கூடி இருக்கிறது அதன் மரபுகள் வரலாறு திருச்சங்கங்கள் ஆசிரியர்கள் மற்றும் புனிதர்களை சுமந்து செல்லுகிறது.

நிகழ்காலம் ஏனென்றால் நாம் இன்றைய உலகத்தை அதன் துன்பம் வலி மற்றும் பாவத்துடன் அதன் சிறந்த சாதனைகள் மதிப்பீடுகள் மற்றும் நற்பண்புகளுடன் சந்திக்கப் போகின்றோம்.

எதிர்காலம் ஏனென்றால், மக்கள் அவசரமாக அதிக நீதிக்காக குரல் கொடுக்கின்றார்கள், அமைதியை விரும்புகிறார்கள். மேலும் கிறிஸ்துவின் திரு அவை அவர்களுக்கு வழங்கக் கூடிய மற்றும் விரும்பக்கூடிய ஓர் உயர்ந்த வாழ்க்கைக்கான ஆழமான தேவையை அதாவது பெரும்பாலும் சொல்லப்படாத தேவையை உணர்கிறார்கள். நமக்கும் அதேதான் இரண்டாம் வத்திக்கான் திரு சங்கத்தின் ஆவணங்களின் தரவுகளையும் தடையங்களையும் அணுகி அதன் இறைவாக்கையும் பொருத்தத்தையும் மீண்டும் கண்டுபிடிப்பதன் வழியாக, திரு அவையினுடைய வாழ்க்கையில் வளமான பாரம்பரியத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதேவேளையில் நிகழ்காலத்தை கேள்விக்குள்ளாக்குகிறோம். அன்பு, நீதி, மற்றும் அமைதியின் அரசான இறையாட்சியின் நற்செய்தியை உலகிற்கு கொண்டு வருவதற்காக இயங்குவதன் மகிழ்ச்சியை புதுப்பிக்கின்றோம். இவ்வாறு திருத்தந்தை 14ம் லியோ தனது மறைக்கல்வி உரையை நிறைவு செய்தார்.

## அருட் தந்தை கிரிஸ்ரி யோக்கீம்பிள்ளை (OMI). (சிறப்புக் கட்டுரை)

அருட்தந்தை அமலமரித்தியாகி கிரிஸ்ரி யோக்கீம் பிள்ளை அவர்கள் தன்னுடைய வாழ்க்கையிலே குடும்பத்திலே கடைசியாக பிறந்தவர் என்றும், தான் சுகயீனமாக இருக்கும் பொழுது தன்னுடைய அம்மா கடவுளுக்காக அர்ப்பணித்து நேர்த்தி செய்ததற்கிணங்க அவரை குருமடத்தில் சேர்த்து படிப்பித்தார்கள் என்றும் தான் குருவாகிய பின்பு வத்திக்கானிலே சென்று மெய்யியல் படித்து, படிப்பிக்கின்ற மெய்யியல் பேராசிரியராக பட்டம் பெற்று இலங்கைக்கு திரும்பினார். இலங்கையில் அவருடைய மெய்யியல் கருத்துக்கள் மிக சுதந்திரமான ஒன்றாகவும், அந்த நேரத்திலே இருந்த கத்தோலிக்க திருச்சபையின் பெரியவர்களால் மிக விடுதலை வேட்க்கை நிறைந்ததாகவும் கருதப்பட்டதனாலும் அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்ற காரணத்தாலும் அவர் அங்கிருந்து புறப்பட்டு வெளிநாடுகளில் பணிபுரிய ஆரம்பித்தார்.

அமெரிக்காவிலே இருக்கின்ற மாநிலத்திலே ஒரு குருமடத்திலே சேர்ந்து அங்கே படிப்பிக்க ஆரம்பித்து 10 வருடங்களின் பின் கனடாவிற்கு வருகை தந்து கனடாவிலே ரொறொன்ரோவிலே இருக்கின்ற குருமடத்திலே பேராசிரியராக பணிபுரிந்து, அவருடைய நாற்பது வருடகுருத்துவ நிறைவை முன்னிட்டு அவருக்காக நாம் விழா எடுத்த காலத்தையும் நாம் நினைவு கூறுகின்றோம்.

1987ம் ஆண்டிலே ஒன்ராறியோ மாநிலத்திலே ஒரு தமிழ் குருவும் பணிபுரியாத நேரத்திலே அவர் இங்கே குருமடத்திலே தன்னுடைய பணிகளை ஆரம்பித்து பணி புரிந்து கொண்டிருந்த நேரத்திலே இங்கு வருகை தந்த பலரோடு தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு என்று ஒரு தமிழ் கத்தோலிக்க குழு ஒன்றை அமைத்து, அவர்களோடு இணைந்து மருதமடு அன்னையின் திரு விழாவை வருடத்தில் ஒரு முறை கொண்டாடுவதாக அனுமதியை பெற்றுத்தந்தார்.

அதே நேரத்திலே கிரிஸ்ரி யோக்கீம்பிள்ளை அடிகளார் வத்திகானிலே படித்து கொண்டிருக்கின்ற பொழுது, ரொறொன்ரோவிற்கான ஆயராக இருந்த தோமஸ் அம்புரோஸ் அவர்கள் கர்தினாலாகவும் ரொறொன்டோ பேராயராகவும் இருந்தார். கல்வி பயில்கின்ற காலங்களில் இவருடன் கிரிஸ்ரி யோக்கீம்பிள்ளை அடிகளார் பெற்றுக்கொண்ட நட்புறவின் காரணமாக, இங்கு வாழுகின்ற தமிழ் மக்களினுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு

இணக்கம் தெரிவித்து, பல பணிகளை மேற்கொண்டார்.

ஆரம்ப தமிழ் கத்தோலிக்க நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி, நிறைவேற்றி தமிழ் கத்தோலிக்க விசுவாசத்திற்கு அளப்பரிய பங்காற்றி வந்த காரணத்தால், இவரையே முதலாவது ஒன்ராறியோ மாநிலத்தின் தமிழ் ஆன்மீகப் பணயின் தமிழ் குருவானவராக இவர் ரொறொன்ரோவிலே பணி புரிந்து வந்த காலத்திலே நியமிக்கப்பட்டார்.

அதே நேரத்திலே இவர்தான் அமலமரித் தியாகிகளின் ஆங்கிலப் பகுதிக்கு கூட முதல்வராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதுமட்டுமல்லாமல் இவர் இங்கு வருகை தந்த காலங்களிலே படிப்பித்த எத்தனையோ குருக்கள் ஆயர்களாக வந்திருக்கின்றார்கள். இவருடைய உயர்தன்மையை நினைவிற் கொண்டு பல காரியங்களை இவர் செய்கின்ற பொழுது எடுக்கின்ற தீர்மானங்களை உயர் அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒரு இயல்பிலே அவருடைய வாழ்வியல்புகள் இங்கே நடந்துகொண்டிருந்தன. அந்த நேரத்தில் தான் தமிழ் பகுதிக்கு என்று ஒரு குருவானவர் பணி புரிய வேண்டுமென்று இவர் கேட்டுக் கொண்டிதற்கு இணங்க, இங்கு வருகை தந்திருந்த அருட் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் அவர்கள் தமிழ் கத்தோலிக்க பணிகளுக்கென்று பொறுப்பாக அமர்த்தப்பட்டார்.

அந்த நேரத்தில் இங்கு ரொறொன்ரோ தமிழ் கத்தோலிக்க சங்கம் பதிவு செய்யப்பட்டது. அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து ஆரம்பித்த விடயங்களிலே அவரோடு கூட என்னுடைய பணி மிக உரிமையோடு நிறைவேற்றப்பட்டது. அந்த நேரத்தில் அவர் எங்களுக்கு கொடுத்த ஆலோசனைகள் அவர் எங்களோடு கூட இருந்து நடாத்திய எத்தனையோ காரியங்கள் எல்லாமே அடுத்தடுத்து நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் அவருடைய அறிவுரை மிக பலமாக அமைந்திருந்தது. அதன் காரணத்தினால் ஆரம்பத்தில் நாங்கள் ஒரு "தமிழ் கத்தோலிக்க மிஷன்" என்று கூறி ஒரு தற்காலிக ஆன்மீக பணியகமாக இயங்கி கொண்டிருக்கும் பொழுது, 1992ம் ஆண்டில் அதை நாங்கள் தமிழ் பங்காக மாற்றுவதற்கும் அவருடைய துணை மிக தெளிவாக அமைந்திருந்தது.

அப்படியான விடயங்களோடு மட்டுமல்லாமல் நாங்கள் செய்கின்ற பொதுவான விடயங்கள், ஆரம்பித்த திரு யாத்திரைகள், நாங்கள் செய்து கொண்ட பல விடயங்களுக்கு அவருடைய அறிவுரையும் ஆதரவும் ஆசீர்வாதமும், அவருடைய பிரசன்னமும் இருந்தது. கூட்டங்களில் மாநாடுகளில் யாத்திரைகளில் அவர் எங்களோடு கூட பயணித்தார். அப்படியான ஒரு உன்னதமான உயர்ந்த பணியை மேற்கொண்ட எங்களுடைய தந்தை அருட்தந்தை யோக்கீம் பிள்ளை அவர்கள் தை மாதம் 6ம் திகதி பிறந்தவர். அவருடைய வாழ்க்கையிலே எங்களோடு கூட கிட்டத்தட்ட 40 வருடங்கள் பயணிப்பதற்கு வாழ்ந்து மடிந்திருக்கின்றார். அவருடைய ஈடுபாடு இல்லாமல் அந்த நேரத்தில் நாங்கள் செய்யவில்லை. அவர் நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திலும் எங்களோடு கூட இருந்தார். எங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையிலே சில அறிவுரைகளை நேரடியாக கூட எழுதி அனுப்புவார். சில நேரங்களில் நாங்கள் ஒன்று கூடி கூட்டங்களிலே கதைக்கின்ற முக்கியமான விடயங்களை மனதில் கொண்டு, இலங்கை அரசாங்கத்திற்கு கூட தமிழ் மக்களினுடைய உரிமைகளை பற்றி தெளிவு படுத்தி, எத்தனையோ மடல்களை அனுப்பியதை அவருடைய கைபட எழுதியதை எமக்கு காட்டி கூறி இருக்கின்றார். அவருடைய வாழ்க்கையிலே அவர் முழுமையாக விசுவாசத்தோடு உறுதியாக பகிர்ந்து கொண்ட எல்லா பணிகளாலும் தான் இன்று தமிழ் கத்தோலிக்க சமூகம் தலை நிமிர்ந்து நின்று ஒரு பங்காகவும் திகழ்கின்றது என்றால் மிகையாகது என்பதையும் நான் கூற விரும்புகின்றேன்.

(ஆசிரியர் தோமஸ் டேவிட்)

## மன்னார் தோட்டவெளி தேவன்பிட்டி கிராமத்தின் விசுவாச வரலாறும் அதன் சிறப்புக்களும்

தேவன்பிட்டி என்கின்ற கிராமம், மன்னார் மறைமாவட்டத்தின் எல்லைப் பகுதியில் வெள்ளாம் குலத்திற்கு அருகாமையில் கரையோரப்பகுதியில் அமைந்திருக்கின்றது. இந்த கிராமத்தினுடைய சரித்திர பூர்வீக செயற்பாடுகளை பற்றி சிந்திக்கின்ற பொழுது, இந்த கிராமம் ஆரம்ப காலத்திலே, முன்னூறு நானூறு வருடங்கள் தொடக்கம் இன்று வரையும் இருக்கின்ற வலி மீசாம், அதாவது வடமாகாணத்திலே வலி மீசாமாக இயங்கிய இரண்டாவது பங்கென்று நினைவு கூறக் கூடிய இரணைதீவு வலி மீசாமிலே, பூர்வீக மக்களாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் பளை, பரந்தன், கிளிநோச்சி, பூநகரி வலைப்பாடு, நாச்சிக்குடா, தேவன்பிட்டி, இலுப்பைக் கடவை, கத்தாளம்பிட்டி மக்கள். இப்போது யோசப்வாஸ் கிராம மக்கள். அத்தோடு இந்த கிராமங்களிலே வாழ்கின்றவர்கள் இரணைதீவின் பூர்வீக மக்களாவர். இதில் நாச்சிக்குடா விடத்தல் தீவு, மாந்தை மக்களும் அடங்குவர்.

இவர்களுடைய வாழ்வியல்பிலே ஆரம்ப காலத்திலே புனித சவேரியாரும் தூத்துக்குடிக்கு வருகை தந்து பின் இலங்கைக்கு வந்து இந்த கிராமங்களை கால்நடையாக சந்தித்தது என்ற சரித்திரமும்

இருக்கின்றது. புனித சவேரியார் இந்த இயல்புகளிலே ஈடுபட்டு இறுதியாக தோட்டவெளியில் அமைந்திருக்கும் வேதசாட்சிகள் கிராமம், அதாவது யோசப்வாஸ் கிராமத்திலே சங்கிலி அரசன் காலத்திலே நடந்த சண்டைகள், பிரச்சனைகளுக்கு மத்தியிலே அங்கிருந்து இந்த மருதமடு அன்னை அதாவது இலங்கை தேசிய யாத்திரை ஸ்தலமாக பிரபல்யமாக்கப்பட்டிருக்கின்ற மருதமடு அன்னையின் சுருபத்தை சங்கிலி அரசனுடைய காலத்திலே நடந்த போரிலே இறந்த வேதசாட்சிகளின் மத்தியிலே இருந்த சங்கிலி அரசனுடைய மகனும் கெலன் என்கின்ற ஒரு வெளிநாட்டு பெண்மணியும் சேர்ந்து மருதமடு அன்னையின் சுரூபத்தை காட்டு பகுதிக்கு கொண்டு போனதாக சரித்திரக் கதை இருக்கின்றது. இந்த காட்டுப்பகுதியே இன்றைய மருத மடு கிராமம். எனவே மருதமடு அன்னையின் அந்த அற்புத சுரூபம் முதன் முதலிலே இருந்த இடம் தோட்டவெளி வேதசாட்சிகள் தேவாலயம் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புனித சவேரியார் அங்கிருந்ததின் பின் அவர் மலேசியாப் பகுதிக்கு பணி புரிய வந்து அங்கிருந்து அவர் மலாக்கா என்கின்ற மாநிலத்திலே வாழ்ந்து இறுதியில் அங்கே மரணித்து அடக்கம் செய்யப்பட்டார்.

புனித சவேரியார் அடக்கம் பண்ணப்பட்டிருந்த பொழுது, அவருடைய உடல் பல காலமாக அழியாமல் இருந்ததாகவும், அங்கிருந்து அந்த உடலை எடுத்து திருப்பி கோவாவிற்கு கொண்டு போய் இன்று வரைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நாம் அறிய வேண்டும். ஒவ்வொரு பத்து வருடமும் இந்தியாவிலே அந்த சுரூபம் அவருடைய உடல் கீழே இறக்கி மக்களுடைய பார்வைக்கு கொடுக்கப்படுகின்ற சரித்திரமும் இருக்கின்றது. இந்த வருடம் அவருடைய உடல் இறக்கப்படட்டு உலகம் முழுவதும் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் அவருடய அந்த மரணத்தின் நிமித்தம் அடக்கம் பண்ணப்படடிருந்த மலாக்கா புனித சவேரியார் தேவாலயத்திலே, சிங்கப்பூரிலே நான் இருந்த காலத்திலே இது ஒரு நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். அந்த தேவாலயத்திலே இரண்டு வாரங்கள் பணிபுரிவதற்கு அழைக்கப்பட்டு அங்கு சென்று அங்கே மலாக்காவிலே இருந்த தமிழ் மக்களினுடைய பூர்வீக குடி மக்கள் அவர்களை பழங்குடி தமிழ் மக்கள் என்று அழைப்பார்கள். அவர்கள் மத்தியிலே கிறிமஸ் விழாவிற்கான ஆயத்த ஞானொடுக்கத்தை வழி நடத்துவதற்கு சென்று பணிபுரிந்த காலத்திலே, அவருடைய சரித்திரத்தை முழுமையாக அறிவதற்கும், அதனுடைய சரித்திர வரலாற்றை பற்றி புரிந்து கொள்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பத்தை நான் இன்று வரையும் மறக்க முடியாது. குறிப்பாக, எனது உறவினர்கள் வாழும் தேவன்பிட்டியில்கூட புனித சவேரியாரின் தேவாலயம் இருப்பதையும், அதனது வரலாற்றின் தொடர்பாடல்களையும் நான் அறிந்து கொள்ளக்கூடியதாக அமைந்தது.

அவருடைய அந்த சரித்திரத்தினால் உலகிலே ஏற்றுக்கொள்ளப்படுகின்ற எல்லா நாடுகளிலும் மலேசியா நாடு மட்டும் பாப்பரசரை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குரிய காரணம், புனித சவேரியாருடைய உடல் அழியாமல் இருந்த அந்த இடம் மலேசியாவின் மலாக்கா என்ற மாநிலத்திலே தான் இருக்கின்றது. பூர்வீக தமிழ் மலேசிய மக்கள் அங்கிருப்பினும், அந்நாடு இன்று இஸ்லாம் ஆட்சியின் கீழ் உள்ளது. ஆகவே திருத்தந்தையை மலேசிவிற்குள் அனுமதித்தால், புனித சவேரியாரின் சரித்திர வரலாறும் கிறிஸ்தவ பின்னணியும் இஸ்லாம் ஆட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதே.

அங்கே எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தோடு அங்கிருந்து பலமுறை நான் இந்த தேவன்பிட்டியை பற்றி சிந்திப்பது வழமை. காரணம் இரணை தீவு என்கின்ற வலி மீசாமுக்குள்ளே இருந்து அந்த பூர்வீக மக்களினுடைய ஒரு கிராமமாக இந்த தேவன்பிட்டி உருவாகுவதற்கு காரணமாக இருந்தது புனித சவேரியார் தான். அந்த சவேரியாரினுடைய தெய்வீக இயல்புகளிலே கிராமம் கிராமங்களாக சென்று போதித்த பொழுது தேவன்பிட்டியிலே மட்டும் அந்த தெய்வீக மகனுடைய இயல்பை பற்றி வெளிப்படுத்துகின்ற ஒரு புதிய பெயரோடு அந்த கிராமம் உருவாக்கப் பட்டிருக்கின்றது. இந்த கிராமத்தினுடைய பெருமை என்னவென்றால் அந்த மருதமடு அன்னையின் தேசியத்திரு யாத்திரை ஸ்தலத்தின் சுருபம் 2008ம் ஆண்டு உள்ளூர் பிரச்சனைகளினால் பாதுகாக்கப்பட வேண்டுமென்று உணர்ந்த கத்தோலிக்க திருஅவை அந்த சுருபத்தை அங்கே கொண்டுவந்து பாதுகாத்த சம்பவமும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

இதற்கிடையிலே இந்த தெய்வீக இயல்பு கொண்ட இந்த கிராமத்திலே வாழ்ந்தவர்களுடைய விசுவாசம் மட்டுமல்ல, அந்த விசுவாசத்தை பற்றியெரிய வைத்த புனித சவேரியாருடைய இயல்பு இங்கு பிரபல்யமாக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் இப்பொழுது எங்கள் மத்தியிலே இந்த மாதம் 31ம் திகதி அதே தேவாலயத்திலே வருகை தந்து முதல் திருப்பலியை அதே கிராமத்திலே பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த **அருட்பணி பிலேந்திரன் வொன்சியஸ் (CMF) அடிகளார்** இப்பொழுது குருவானவராக வருகை தந்து முதல் திருப்பலியை நிறைவேற்ற இருக்கிறார். அவருடைய அந்த திருப்பலி நிறைவேற்றுகின்ற பொழுது அவருடைய இயல்பை பற்றி ஒரு சில வார்த்தைகள் அதாவது அவரும்

அவருடைய குடும்பத்திலே அவருடைய சகோதரிகள் இரண்டு பேரும் கன்னியர்களாக இருக்கின்றார்கள். இவருக்கு முன்பு கன்னியர்களாக இருக்கின்றார்கள். இவர் குடும்பத்திலே ஒன்பதாவது மகன் என்ற முறையிலும் இப்பொழுது அவர் குருவாக ஜேர்மனியிலே சென்று கிளரேசியன் சபையிலே படித்து, கடந்த எட்டு ஒன்பது வருடங்களாக அங்கிருந்து அவர் ஒன்பது மொழிகளை கற்றுத்தேர்ந்த ஒரு வல்லவனாகவும், இறை இயேசுவினுடைய விசுவாச நம்பிக்கையுடையவனாகவும் அவருடைய பணியை தொடர்ந்து ஜேர்மனியிலே மேற்கொள்ள உரியவனாக மாறி இருப்பதும், அவர் முதல் திருப்பலியை நிறைவேற்றும் பொழுது ஜேர்மன் மொழியிலே அந்த திருப்பலியை குருப்பட்டம் பெற்ற பொழுதே அதை வெளிப்படையாக நிறைவேற்றிய விதமும், எமது உள்ளங்களிலே அளவிடமுடியாத அகமகிழ்வை தந்து நிற்கின்றது.

தெய்வீக தேவன்பிட்டியிலே பிறந்த மகனாக தெயவீக இயல்பினை தெளிவாக அறிந்த மகானக தெய்வீக பணியையே மேற்கொள்ளுவதற்கு தன்னை முழுமையாக அர்பணித்தவனாக புறப்பட்டுச் சென்று முழுமையாக்கப்பட்டவனாக, மீண்டும் தேவன்பிட்டிக்கு வந்து இந்த திருப்பலியை நிறைவேற்றி, தேவன்பிட்டியிலிருந்து திரும்பவும் ஜேர்மனிக்கு சென்று பணியாற்ற இருக்கின்ற விருட்சமான விடயங்களை, எமது ஞானக் கண்கள் கண்டு மகிழ்ச்சி கொள்கின்றன. கடந்த நாற்பது ஐம்பது வருடங்கள் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு ஊடகவியலாளராக செயற்பட்டு வரும் எனக்கு இவருடைய குருப்பட்டமும் இவரிடம் இருந்து வெளிப்படுகின்ற அந்த ஆற்றல்களும் அந்த ஞான அறிவுகளும் நாம் அளவிட முடியாத அளவிற்கு எமது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒரு பெரிய எதிர்காலத்தை இறைவன் இவர் மூலமாக நிறைவேற்ற இருக்கின்றார் என்ற நம்பிக்கையும் விசுவாசமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே இந்த சகோதரனுடைய திருப்பலி இந்த திருநிலைப் படுத்தலுடைய நிகழ்வு 17ம் திகதி நிறைவேற்ற பட்டிருந்தாலும், 31ம் திகதி திருப்பலி நிறைவேற்றினாலும், தொடர்ந்து வரப் போகின்ற இவருடைய விசுவாசப் பணிகள் பாரெங்கும் பரந்திருக்க வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றோம்.

## அருட் தந்தை சூசை அடிகளார் (அ.ம.தி), எட்மன் மறைமாவட்ட ஆயராக நியமணம்

வத்திக்கான் திருச்சபையினால் அமலமரித்தியாகிகளை அங்கிகரித்து 200 வருடங்கள் நிறைவேறியிருப்பதை பெருமையுடன் நினைவு கூரும் இவ்வேளையில், அவர்களுடைய பணிகளில் உலகளாவிய ரீதியில் நடந்து கொண்டிருக்கின்ற பல சம்பவங்களில் ஒன்றாக அருட் தந்தை சூசை அடிகளார் (அ.ம.தி), மொனிற்றோவாவில் உள்ள எட்மன் மறைமாவட்டத்திற்கு ஆயராக நியமிக்கப்பட்ட செய்தியையும் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கனடா இணையத்தளம் அடிகளாரை வாழ்த்தி நிற்கின்றது.

## அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி), யாழ் மறைமாவட்ட அமலமரித் தியாகிகள் சபையின் முதல்வராக இரண்டாவது தடவையாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்

அருட்தந்தை போல் (அ.ம.தி), அவர்கள் அமலமரித் தியாகிகளின் யாழ் மறைமாவட்டத்தினுடைய முதல்வராக இரண்டாவது தடவையாகவும நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த 200 ஆண்டுகளுக்கு முதல் அமலமரித்தியாகிகள் இலங்கைக்கு வருகை தந்து, இலங்கையில் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற காலங்களையும் நாம் எண்ணுகின்றோம். அவர்களின் அளப்பெரிய ஆன்மீக பணிகளை சொல்லி முடிக்க முடியாது. இலங்கை மக்களின் இதயக்கதவருகே நின்று இறையரசுக்காக உழைத்தவர்கள். இவர்கள் பணி சிறந்து விழங்கி இறைவனுக்கு மகிமை சேர்க்க கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் வாழ்த்தி நிற்கின்றது.

## மரண அறிவித்தல்

கனடா ஆரோக்கிய மாதா பங்குத்தந்தை அருட் திரு சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரின் அதந்தை 22.01.2026 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா பரலோக வான் வீட்டில் வாழ, தமிழ் கத்தோலிக்க மக்கள் சார்பாக, கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் பிராத்திக்கின்றது. கனடா குடும்பத்தாருக்கு தமிழ் கத்தோலிக்க இணையத்தின் ஆழ்ந்த அனுதாபங்களும் பிராத்தனைகளும






**வன்முறையை நிராகரித்தல்,**
**அன்பு மற்றும் நீதி மூலம்**
**அமைதியைக் கட்டியெழுப்புதல்,**
**மற்றும் மோதலைக் குறைக்கும்**
**வாழ்க்கை முறையில்**
**இதை உள்ளடக்குதல்**










# CANADA TAMIL CATHOLIC NETWORK SERVICE

## கனடா தமிழ் கத்தோலிக்க வெளியீட்டக இணையம்

### செயற்பாடுகள்

01.சகல அரசசாசன விண்ணப்பங்கள் அனைத்தும் இங்கே நிரப்பிக்கொடுக்கப்படும்
02. குடியகல்வு குடிவரவு தொடர்பான வேலைகள் செய்துகொடுக்கப்படும்
03. "அன்பு மக்களே" சஞ்சிகை வெளியீடல்
05. புனித ஸ்தலங்களுக்கான யாத்திரை பயண ஒழுங்குகள் மேற்கொள்ளல்
06. வாரம்தோறும் பரம்பொருள் வானொளி நிகழ்வு
07. ஆன்மீக நிகழ்வுகள் விசேட நிகழ்வுகள் விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படும்
08. ஞானொடுக்கம் தியானம் கருத்தரங்குகள் நடாத்துதல்
09. ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு
10. ODSP: ONTARIO DISABILITY SUPPORT PROGRAMME
11. social assisiance (welfare)
12. volunteer support

## COUNSELLING

01. குடும்ப பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் குடும்ப உளவளத்துணை
போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி வாழும் அனைவருக்குமான உளவளத்துணை

**உங்கள் தொடர்புகளுக்கு**
**647 - 852 - 3141**






## கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தின் அறிவிற்கும் ஆன்மீகத்திற்குமான ஐரோப்பிய திருப்பயணம்

ஐரோப்பிய திருப்பயணம் வைகாசி (Month of May), மாதம் 02ம் திகதி ஆரம்பித்து வைகாசி மாதம் 22ம் திகதி முடிவடையும். வத்திக்கான் நகரில் ஆரம்பித்து பிரான்ஸ் ஸ்பெயின் ஊடாக வந்து இறுதியில் போர்த்துக்கல் நாட்டில் நிறைவடையும்.

அடுத்த நாள் 03ம் திகதி வத்திக்கான் நகரை தரிசித்தல் : கத்தோலிக்க திருச்சபையின் உலக புகழ்பெற்ற சரித்திரம் வாய்ந்த அதிசயங்களை தரிசித்தல்.

பின் பரிசுக்கு சென்று வெள்ளைத்தேவாலயம், நெப்போலியன் நூதனசாலை மற்றும் புனித பெனடிக்ற்றம்மாவின் ஆலயத்தை பார்வையிடல்.

லூர்து நகருக்கு சென்று தூய தண்ணீரில் மூழ்கி எழுந்து குணம் பெறும் நிகழ்வில் பங்கெடுத்தல்.

## ஸ்பெயினுக்கு சென்று

புனித அந்தோனியார் தனது குருத்துவ கல்வி பயின்ற குருமடத்தை பார்வையிடல்

புனித யாகப்பரின் திருத்தலம் மற்றும் புனித சந்தியாகு தேவாலயம் பார்வையிடல் (Spain)

புனித பாத்திமா அன்னையின் தேவாலயம் தரிசித்தல்

பின் பற்றிமா மாதாவை தரிசித்துவிட்டு லிஸ்பன் நகருக்கு சென்று புனித அந்தோனியார் தேவாலயத்தை தரிசித்த பின் வைகாசி மாதம் 22ம் திகதி ரொறொன்ரோவுக்கு திரும்புவோம்.

. .